பக்கங்கள்:-21

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | பங்குனி 22 | வெள்ளிக்கிழமை | 05.04.2024 | அதிர்வு 248

## மைத்திரி தொடர்பான வழக்கு ஏப்ரல் 10 வரை ஒத்திவைப்பு



உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனகுற்றப் புலனாய்வுத் திணைக் 06▶

# வடக்கு, கிழக்கு மக்களின் ஆணை இல்லாத ஆட்சி நாட்டை முன்னேற்றாது!

## தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் தம்மை ஆதரிக்க வேண்டும் என அநுர கோரிக்கை




(எஸ்.நிதர்ஷன்)

"இந்த நாட்டில் ஆட்சி மாற்றம் விரைவில் வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. வடக்கு, கிழக்கு மக்களின் ஆணை இல்லாத ஆட்சி நாட்டை முன்னேற்றாது. ஆகையினால் அனைத்து மக்களின் ஆணையுடனான ஆட்சி அமையப் பெற வேண்டும். அவ்வாறு இன, மத பேதமில்லாத ஆட்சி அமைய வேண்டுமானால் தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் எமக்கான ஆதரவை வழங்க வேண்டும்."

- இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க கோரிக்கை விடுத்துள்ளார். 06▶

## போலி வீரர்களை உருவாக்கும் கலாசாரம் நிறுத்தப்பட வேண்டும்

### எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து



"மொழிவாதம், மதவாதம், இனவாதம் அடிப்படையில் போலித்தனமான வீரர்களை உருவாக்கும் கலாசாரம் இல்லாதொழிக்கப்பட வேண்டும்."

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.

பிரபஞ்சம் தகவல் தொழில்நுட்ப வேலைத்திட்டத்தின் கீழ், 141 ஆவது கட்டமாக 10 இலட்சம் ரூபா பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை 06▶




தேசிய மக்கள் சக்தியின் (ஜே.வி.பியின்) தலைவர் அநுரகுமார திஸநாயக்க யாழ்ப்பாணத்தில் நிற்கின்றார்.

'சோழியன் குடுமி சும்மா ஆடுவதில்லை தானே...!' ஜனாதிபதி தேர்தல் வருகின்றது. தமிழர் தரப்பில் (வாக்குகள்) சுருட்டிய மட்டில் லாபம் என்ற கணக்கில் பிடுங்க முயற்சி எடுத்து வந்திருப்பார் என நினைக்கிறேன்.

தமிழர் தாயகமான வடக்குக் கிழக்கைப் பிரித்த பிரதான பிரகிருதி இவர்தான். இவரது கட்சிதான். இப்போது வாய் சொட்டச் சொட்ட, தமிழர் தேச – தேசிய – ஐக்கியம், தமிழர் பண்பாடு, அவர்களின் அடிப்படை உரிமைகள், கௌரவமான 06▶


வெற்றிகரமாக 10ஆவது ஆண்டில்
ரூபின்ஸ் வைத்தியசாலை
ஏப்ரல் 05
வடமராட்சி மக்களின் 24hrs ஆரோக்கிய காவலன்
Ruhbins Hospital
உங்கள் நலமே எங்கள் நோக்கம்
Ruhbins Hospital (PVT) LTD
No 160 Pointpedro Road, Nelliady, Jaffna
Hotline +94 77 248 6642

# இலங்கையிலிருந்து படகில் தங்கம் கடத்திய மூவர் இந்தியாவில் கைது!

(ந.லோகதயாளன்)

இலங்கையிலிருந்து படகில் தங்கம் கடத்திய மூவர் இந்தியாவின் வேதாளைப் பகுதியில் நேற்று மாலை படகுடன் கைது செய்யப்பட்டனர்.

இலங்கையிலிருந்து படகொன்றில் தங்கம் கடத்திச் செல்வதாக இந்தியாவின் மத்திய வருவாய்ப் பகுதியின் புலனாய்வாளர்களுக்குக் கிடைத்த தகவலுக்கமைய அவர்கள் வேதாளைப் பகுதியில் பதுங்கியிருந்தனர். இதன்போது கரையொதுங்கிய படகை மடக்கிப் பிடிக்க முயன்ற சமயம் கடத்தப்பட்ட தங்கத்தைக் கடத்தல்காரர்கள் கடலில் வீசினர்.

தங்கத்தைக் கடலில் வீசியபோதும் படகில் பயணித்த கடத்தல்காரர்கள் மூவரும் கைது செய்யப்பட்டனர்.



இதனையடுத்துக் கடலில் வீசிய தங்கத்தைச் சுழியோடிகள் மூலம் மீட்பதற்கு நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

# மீனவர் பிரச்சினை தொடர்பில் நேரில் ஆராய இந்தியா செல்வதை உறுதிப்படுத்திய டக்ளஸ்



(பிரபாகரன் டிலக்சன்)

இந்திய – இலங்கை மீனவர் பிரச்சினை தொடர்பில் இந்தியாவில் நாடாளுமன்றத் தேர்தல் முடிந்த கையோடு தமிழக மற்றும் புதுச்சேரி மாநில முதல்வர்களுடன் இந்தியாவில் நேரடிப் பேச்சை மேற்கொள்ளவுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தைச் சேர்ந்த சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று இடம்பெற்றது.

இதன்பின்னர் கச்சதீவு மீட்பு பற்றி இந்தியாவில் பேசுபொருளாகியுள்ளமை தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“கச்சதீவு இலங்கைக்குச் சொந்தமானதா? இந்தியாவுக்குச் சொந்தமானதா? என்று வாதப்பிரதிவாதங்கள் எழுகின்றன. இந்தியாவில் இருப்பவர்கள் கச்சதீவு இந்தியாவுக்குச் சொந்தம் எனவும், இலங்கையில் இருப்பவர்கள் கச்சதீவு இலங்கைக்கு சொந்தம் எனவும் தமது வாதங்களை முன்வைத்து வருகின்றார்கள்.

எது எப்படி இருந்தாலும் தற்போது இந்தியாவில் தேர்தல் ஒன்று நடைபெறவுள்ளது. தேர்தல் காலங்களில் கச்சதீவு மீட்பு கோஷங்கள் எழுவது வழமையானது.

கச்சதீவைத் திருப்பிக் கொடுப்பதற்கு எந்த வாய்ப்புகளும் இல்லை. ஒரு வேளை கச்சதீவைக் கொடுத்தாலும் கூட கச்சதீவிலிருந்து ஒரு கிலோமீற்றர் தூரம் வரை உட்சென்று மீன்களைப் பிடிக்க முடியுமே தவிர எங்களுடைய நாட்டுக் கரைக்கு வந்து அவர்கள் மீன்பிடிக்க முடியாது.

இந்திய மீனவர்கள் தொழில் செய்யும் முறையானது நமது நாட்டில் தடை செய்யப்பட்ட ஒரு தொழில்முறையாகும். எங்கள் வளங்களையும் கடறொழிலாளர்களுடைய கடற்றொழில் உபகரணங்களையும் சேதப்படுத்தும் தொழிலாக அவர்களுடைய தொழில் உள்ளது.

எனவே, கச்சதீவு மீட்பு தொடர்பில் தேர்தல் காலங்களில் பலர் கதைப்பார்கள். இந்திய – இலங்கை மீனவர் பிரச்சினை தொடர்பில் கலந்துரையாடுவதற்காகத் தமிழகம் மற்றும் புதுச்சேரி முதலமைச்சர்கள் என்னை நேற்று (நேற்று முன்தினம்) தொடர்பு கொண்டார்கள்.

இந்தியாவில் நாடாளுமன்றத் தேர்தல் எதிர்வரும் 19ஆம் திகதி முடிவுறவுள்ளது. தேர்தல் முடிந்த கையோடு இரு நாடகளின் பின் இது தொடர்பில் பேச முடியுமா எனகி கேட்டார்கள். இந்தக் கலந்துரையாடல் தொடர்பில் ஏற்பாடுகளைச் செய்துவிட்டு அழையுங்கள் என்று தெரிவித்தேன்.” – என்றார்.





# 33 ஆண்டுகள் துன்பங்களை மட்டுமே அனுபவித்த எம்மை இனிமேலாவது நிம்மதியாக வாழ விடுங்கள்!

## முருகன், றொபர்ட் பயஸ், ஜெயக்குமார் விநயமான வேண்டுகோள்

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் கைதுசெய்யப்பட்டு, மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக இந்தியாவில் சிறைப்படுத்தப்பட்டிருந்த நிலையில் விடுதலை செய்யப்பட்ட தமிழ் அரசியல் கைதிகளான முருகன், றொபர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகிய மூவரும், தமது மூத்த சட்டத்தரணி புகழேந்தியின் வழித்துணையுடன் சுமார் 33 ஆண்டுகளுக்குப் பின் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திலுள்ள தமது பூர்வீக வாழ்விடங்களுக்கு வந்தடைந்துள்ளனர்.

இவர்களை, "குரலற்றவர்களின் குரல்" அமைப்பினுடைய ஒருங்கிணைப்பாளர் மு.கோமகன் நேற்று நேரில் சென்று சந்தித்து, அவர்களது சுகநலன் மற்றும் இதர விடயங்கள் தொடர்பில் கேட்டறிந்துள்ளார். அதன்போது, தாம் திருச்சி சிறப்பு முகாமிலிருந்து சென்னை விமான நிலையத்திற்கு கொண்டுசெல்லப்பட்டு வானூர்தி வழியாக இலங்கை கட்டுநாயக்கா விமான நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர் எனவும், தாங்கள் மூவரும் தற்காலிக கடவுச் சீட்டிலேயே இலங்கைக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த காரணத்தைக் காட்டி விமானநிலைய குடிவரவு, குடியகல்வு அதிகாரிகளும், குற்றப்புலனாய்வுப் பொலிஸாரும் பல மணிநேர விசாரணைகளைத் தம்மிடம் மேற்கொண்டதன் பின்னரே தமது இருப்பிடங்களுக்குச் செல்ல அனுமதித்தனர் எனவும் அவர்கள் கவலையுடன் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை விடுதலை பெற்று வந்துள்ள முருகன் குறிப்பிடுகையில் –

தனது மனைவி நளினி ஓர் இந்தியப் பிரஜை என்பதால், தமிழகத்தில் இருக்கின்றார் எனவும், சிறையில் பிறந்த தனது ஒரே மகள் புலம்பெயர்ந்து பிரிட்டனில் வாழ்கிறார் எனவும், இந்நிலையிலேயே தான் இலங்கைக்கு அனுப்பப்பட்டதால் தற்போது தாயாருடன் வசிக்கின்றார் எனவும் குறிப்பிட்டார்.

தமது விடுதலை சாத்தியமாவதற்கு உந்து சக்திகளாக இருந்து துணைபுரிந்தவர்கள், தனது மனைவி பிள்ளையுடன் தானும் சேர்ந்து வாழும் நிலைமைக்கு வழி செய்துதவுமாறு விநயமான கோரிக்கையையும் அவர் முன்வைத்துள்ளார்.

மேலும், இத்தனை வருட காலங்களும் துன்பங்களை மட்டுமே அனுபவித்து, நடைப்பிணங்கள் போன்று சிறைமீண்டு வந்திருக்கும் தம்மை, இனிமேலாவது குடும்ப உறவுகளுடன் நிம்மதியாக காலத்தைக் கழிப்பதற்கு வழிவிட வேண்டும் என்பதே தமது பிரார்த்தனை எனத் தெரிவித்துள்ள மூவரும்,

தமது விடுதலைக்காக பல்வேறு வழி வகைகளிலும் போராடிய உலகவாழ் தமிழ்ச் சொந்தங்கள் அனைவருக்கும் தமது வாழ்நாள் நன்றிகளைக் காணிக்கை செய்வதாக உருக்கத்துடன் விழிகசியக் கூறினர் எனக் குரலற்றவர்களின் குரல் அமைப்பினுடைய ஒருங்கிணைப்பாளர் கோமகன் செய்திக் குறிப்பொன்றின் மூலம் ஊடகங்களுக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.









# தேசிய மக்கள் சக்தி நிதித் துறையின் யாழ்ப்பாண மாவட்ட மாநாடு நேற்று

தேசிய மக்கள் சக்தியின் வங்கி மற்றும் நிதித்துறை மன்றத்தின் யாழ்ப்பாண மாவட்ட மாநாடு நேற்று மாலை யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் மண்டபம் ஒன்றில் இடம்பெற்றது.

குறித்த மாநாட்டில், தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் வசந்த சமரசிங்க, தேசிய மக்கள் சக்தியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம், வங்கி உத்தியோகத்தர்கள், வர்த்தகர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.















# இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் வடமாகாண மாநாடு நேற்று யாழ் நகரில்

இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் வடமாகாண மாநாடு நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

"இழக்கப்படுகின்ற கல்வி உரிமையை வென்றெடுப்பது எப்படி?" எனும் தொனிப்பொருளில் நேற்றுப் பிற்பகல் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விருந்தினர் மண்டம் ஒன்றில் இந்த மாநாடு இடம்பெற்றது.

இந்த மாநாட்டில், தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க, இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பொதுச் செயலாளர் மஹிந்த ஜயசிங்க, தேசிய மக்கள் சக்தியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினர் வசந்த சமரசிங்க, இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் தேசிய அமைப்பாளர் சுந்தரலிங்கம் பிரதீப், தேசிய மக்கள் சக்தியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகர், அதிபர்கள், ஆசிரியர்கள் என பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.


















## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வாழ்வு பற்றியெல்லாம் புளுகல் செய்திகள், கதைகளுடன் வந்திருக்கின்றார்.

நேற்று மாலை தமிழரசு பிரமுகர் சுமந்திரனை அவர் சந்திப்பதாக ஏற்பாடு – யாழ்ப்பாணத்தில் தனியார் விடுதி ஒன்றில்.

அங்கு ஒரு பொது நிகழ்வில் உரையாற்றிக் கொண்டிருந்தார் அநுரகுமார. அவரைச் சந்திக்க நேரத்துடன் வந்த சுமந்திரன் அந்த நிகழ்வில் பார்வையாளராக அமர்ந்து கொண்டார்.

தமது கருத்துரையில் அநுரகுமார ஒரு விடயத்தைச் சொன்னார். அதன் சாராம்சம் இதுதான்:–

"இந்தியாவைப் பாருங்கள். ஒரு சீக்கியர் மன்மோகன் சிங் அந்த நாட்டின் பிரதமராக முடிந்தது. ஒரு தமிழ் இஸ்லாமியரான அப்துல் கலாம் ஜனாதிபதியாக முடிந்தது. இப்போது ஒரு சிறுபான்மைப் பழங்குடி இனப்பெண் நாட்டின் ஜனாதிபதி. பல மொழி, பல இன மக்கள் வாழும் நாடு ஒற்றுமையாக இப்படி வாழ்கின்றது. அந்த நிலை எப்போது இலங்கைக்கு வரும்?" – என்று விசனத்துடன் கேட்டார் அநுரகுமார.

கூட்டத்தின் முடிவில் அநுரகுமாரவைச் சந்தித்த சுமந்திரன், அநுரகுமார குறிப்பிட்ட இந்திய நிலைமையை நினைவூட்டி, அது ஏன் இலங்கையில் சாத்தியமாக வில்லை, இந்தியாவில் சாத்தியமாயிற்று என்று கேட்டாராம்.

பதிலை சுமந்திரனிடமே எதிர்பார்த்தார் அநுரகுமார.

"அந்த நாடு மொழி வாரி மாநிலங்களாக சமஷ்டி அடிப்படையில் தனித்துவமான முறையில் அமைந்தது. அந்த மக்கள் தத்தமது மொழிகளில் காரியமாற்ற – தத்தமது விடயங்களை அணுகவும் ஆற்றவும் – அனுமதித்தனர். அதுதான் ஒற்றுமையான – பலமான – வலிமையான – ஐக்கியமான – நாடாக அது உருப்பெறுவதைச் சாத்தியமாக்கியது. அதை நீங்கள் இங்கு மறுத்தமையால்தான் இந்த நிலைமை" – என்றார் சுமந்திரன்.

அநுரகுமார முகத்தில் ஈயாடவில்லை.

சுமந்திரன் தொடர்ந்தார்.

"இரண்டு நாடுகளுமே ஒரே சூழ்நிலையில் – ஒரே மாதிரிக் கட்டமைப்பிலேயே – சுதந்திரம் பெற்றன. அந்தச் சமயத்தில் நாங்கள் – தமிழர்கள் – சமஷ்டியைக் கோரவில்லை. ஆனால் சிங்களவர்களாகிய உங்கள் மத்தியில் இருந்துதான் அந்த கோரிக்கை – சமஷ்டி வேண்டுகோள் – அப்போது முதலில் வந்தது. நாங்கள் அதை அப்போது ஏற்கவில்லை. பெரும்பான்மையினரான சிங்களவர்களை நம்பினோம். அதன் விளைவை இன்று அனுபவிக்கிறோம். இந்தியாவிலிருப்பது சமஷ்டி என்று பெயர் குறிப்பிடாத ஒரு சமஷ்டி ஆட்சிமுறைதான். அதுதான் நாடு மேலும் ஐக்கியமாக இருப்பதற்கு உயர்ந்த வலிமையான வழி. சமஷ்டி என்பது பிரிவினை அல்ல. மாறாக, நாட்டின் தேசிய ஐக்கியத்தை வலிமையாக்கி உறுதிப்படுத்தும் ஓர் இறுக்கமான கட்டு" என்று சுமந்திரன் தெளிவுபடுத்தினார்.

பேரினவாதத்தில் மூழ்கிய – ஒரே குட்டையில் ஊறிய – மட்டையில் அநுரகுமாரவும் வேறல்லர். சுமந்திரன் உரைத்த இந்த வேதம் – உண்மை – அநுர குமாரவின் மனத்தில் உறைத்திருந்தாலும், அதைக் கொள்கை அளவில் தன்னும் அவர் ஏற்க மாட்டார் என்பது தெளிவு.

சிறுபான்மையினரான ஒரு தேசிய இனத்தின் தனித்துவம், வாழ்வியல் உரிமைகள், வாழ்வியல் இருப்பு போன்றவற்றை எல்லாம் அங்கீகரித்து, அதற்காகக் கவலைப்படுபவர் போல நேர்த்தியாக யாழ் கூட்டங்களில் லெக்ஸர் அடித்த அவர், தமிழ் தேசியத்தின் தாயகமான வடக்குக் கிழக்கு தனித்துவமாக ஒன்றித்திருப்பதை அங்கீகரிக்கவோ வலியுறுத்தவோ மாட்டார். ஏனென்றால் அவர் மூளையில் ஓடுவதும் கூட பேரினவாத இரத்தம்தான். வெளியில் அவர் சீருடை போட்டு மூடி வைத்திருக்கும் இடதுசாரி வேடம் மூளை மையத்தை மாற்றாதல்லவா?

## வடக்கு, கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணத்தில் நேற்று மாலை நடைபெற்ற இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கத்தின் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கையின் முன்னேற்றம் இன, மத, மொழி கடந்து ஒற்றுமையுடன் இணைந்து செல்லும்போதே மேலும் மேலும் நாட்டை முன்னேற்ற முடியும்.

எனவே, வடக்கு, கிழக்கில் வாழும் சகோதரர்களின் ஆணையில்லாமல் நாட்டை முன்னேற்ற முடியாது. இதுவே காலம் காலமாக நடந்து வந்த நிலையில் இம்முறை அனைவரினதும் ஆதரவைப் பெற்று ஆட்சியமைக்க வேண்டும்.

ஆகையினால் அனைவரது முன்னேற்றத்துக்கும் எமக்கான ஆதரவை ஒருமித்து வழங்க வேண்டும். அவ்வாறு சகலரது ஒத்துழைப்புடனும் ஆதரவுடனும் ஆட்சி அமைக்கப்படுகின்றபோது எந்தவித பாகுபாடுகளுமின்றி ஆட்சி அமையப்பெறும்.

இதனூடாக நீண்ட காலமாக இருந்து வருகின்ற பிரிவினை அரசியலுக்கு முடிவு காட்டி இன, மத பேதமில்லாத ஒன்றிணைந்த அரசியலை மேற்கொள்ள எம்முடன் அனைவரும் வாருங்கள்.

எனவே, அனைவரும் சம உரிமைகளுடன் சந்தோசமாகவும் நிம்மதியாகவும் வாழக் கூடியதான ஆட்சி அமையப் பெறுவதற்கு எமக்கான ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்குங்கள் என இங்கு வைத்து தமிழ்க் கட்சிகளின் தலைவர்களிடம் கோருகின்றோம்." – என்றார்.

## போலி வீரர்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உபகரணங்கள், முல்லைத்தீவு, விசுமடு பாரதி மகா வித்தியாலயத்திற்கு வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் கலந்துகொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

இந்நிகழ்வில், கல்லூரியின் நூலகத்திற்குத் தேவையான புத்தகங்களைப் பெறுவதற்காக ஒரு இலட்சம் ரூபா நிதியையும் எதிர்க்கட்சித் தலைவர் வழங்கி வைத்தார்.

அவர் உரையாற்றும்போது மேலும் தெரிவித்ததாவது:–

"சமூகத்தில் நிலவி வரும் பல்வேறு பிரச்சினைகளுக்கு கல்வியின் மூலம் பதில் வழங்க முடியும் என நான் நம்புகிறேன். இன்றைய சமூகத்தில் அண்மைக் காலம் வரை இனம், மதம், சாதி, குலம் என்ற அடிப்படையில் சிங்களவர், தமிழ், முஸ்லிம், பர்கர் என இனங்களுக்கிடையில் முரண்பாடுகள் இருந்து வந்தன. சமூகம் பிளவுபட்டுள்ள இவ்வேளையில், பிளவுபட்ட சமூகத்தை ஒன்றிணைப்பதற்கு கல்வியே சிறந்த வழியாகும் என நம்புகின்றேன். மொழிவாதம், மதவாதம், இனவாதம் அடிப்படையில் போலித்தனமான வீரர்களை உருவாக்கும் கலாசாரம் இல்லாதொழிக்கப்பட வேண்டும்.

ஒரு நாடாக நாம் பயங்கரவாதத்தைத் தோற்கடித்தாலும், நாம் பெற வேண்டிய சமாதானத்தின் பலன்களை எம்மால் பெற முடியாது போயுள்ளது. போரை முடிவுக்குக் கொண்டு வந்தோம் என்று தம்பட்டம் அடித்துக்கொள்ளும் தலைவர்கள் போருக்குப் பிந்திய சர்வதேச ஒத்துழைப்பு மாநாட்டை ஏற்பாடு செய்யவில்லை. இதன் காரணமாக வடக்கு, கிழக்கை உரிய முறையில் அபிவிருத்தி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இவர்களின் பொறாமைத்தன நாடகத்தால் வடக்கு, கிழக்கில் போரின் பின்னர் அபிவிருத்திகள் இடம்பெறவில்லை. ஆனால், ஐக்கிய மக்கள் சக்தி வடக்கு, கிழக்கை மையப்படுத்தி சர்வதேச ஒத்துழைப்பு மாநாட்டை கூட்டி, போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கை அபிவிருத்தி செய்யும் தேசிய வேலைத்திட்டத்தை ஆரம்பிக்கும்." – என்றார்.

## மைத்திரி தொடர்பான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

களத்தில் வழங்கிய வாக்குமூலம் தொடர்பான வழக்கு எதிர்வரும் 10ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

நீதிமன்றத்தில் நேற்று இந்த விடயம் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக முன்னிலையாகுமாறு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டிருந்த போதிலும் அவர் முன்னிலையாகியிருக்கவில்லை.

எனினும், தான் ஏற்கனவே இந்தவிடயம் தொடர்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையாகி வாக்குமூலம் வழங்கியுள்ளதால் நேற்று வாக்குமூலம் வழங்க வேண்டிய அவசியமில்லை என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நீதிமன்றத்துக்குத் தமது சட்டத்தரணி ஊடாக அறியப்படுத்தியிருந்தார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலை நடத்தியது யார் என்பது தனக்குத் தெரியும் என்று மைத்திரிபால கடந்த மாதம் 22ஆம் திகதி ஊடகங்களிடம் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இனந்தெரியாதவரால் ஊடுருவப்பட்ட கல்வி அமைச்சின் இணையத்தளம்!

கல்வி அமைச்சின் உத்தியோகப்பூர்வ இணையத்தளம் இனந்தெரியாத நபரொருவரால் ஊடுருவப்பட்டுள்ளது.

'Anonymous EEE" எனும் பெயர் கொண்ட நபர் இந்த ஊடுருவல் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

அமைச்சின் இணையத்தளத்தில் உள்ள பாதுகாப்புக் குறைபாடுகளை முன்னிலைப்படுத்தி இந்த ஊடுருவல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று அந்த நபர் இணையத்தளத்தில் செய்தி ஒன்றைப் பதிவிட்டுள்ளார்.

அந்த செய்தியில், "எனது பெயர் Anonymous EEE. நான் தற்போது உயர்தரக்கல்வி கற்று வருகிறேன். உங்கள் இணையதளத்தை ஊடுருவியமைக்கு மன்னிக்கவும். எனினும், உங்கள் இணையதளத்தில் சில பாதுகாப்பு குறைபாடுகள் உள்ளன. இலங்கைப் பிரஜை என்ற வகையில்




எனது நாட்டின் பாதுகாப்புக்காக இதனைத் தெரிவிக்கின்றேன். அதை சரி செய்யவும். நன்றி"– எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ரஷ்யாவில் நடத்தப்பட்ட தாக்குதலில் இலங்கையர் உட்பட 14 பேர் காயம்!



ரஷ்யாவின் – அலபுகா நகருக்கு அருகில் உக்ரைன் இராணுத்தின் ஆளில்லா விமானம் நடத்திய தாக்குதலில் இலங்கையர் ஒருவர் உட்பட்ட 14 பேர் காயமடைந்துள்ளனர் என்று தகவல்கள் வெளயாகியுள்ளன.

ரஷ்யாவின் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் உள்ள அலபுகா பொலிடெக் எனப்படும் கல்லூரி விடுதி ஒன்றே இவ்வாறு தாக்கப்பட்டுள்ளது என்று ரஷ்ய செய்திகள் தெரிவித்துள்ளன.

இந்தத் தாக்குதலின் போது காயமடைந்தோரில் வெளிநாடுகளைச் சேர்ந்த 8 மாணவர்களும் உள்ளடங்குகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பாதிக்கப்பட்ட மாணவர்கள் அனைவரும் தொழில்நுட்பக் கல்லூரியில் படித்து வந்தவர்கள் என்று ரஷ்ய சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், காயமடைந்த 14 பேரில் கிர்கிஸ்தான், சிம்பாப்வே, ருவாண்டா, கொங்கோ, கென்யா, நைஜீரியா மற்றும் தெற்கு சூடான் நாட்டவர்களும் அடங்குவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழகப் பிரபல பேச்சாளர் தலைமையில் சிந்தனை அரங்கம் ஆதீனத்தில் நாளை

தமிழகத்தின் முன்னணிப் பேச்சாளர் இலக்கியச்சுடர் த. இராமலிங்கம் தலைமையில் "சிந்தனை அரங்கம்" நிகழ்வு நாளை சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நல்லை ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வவுனியாவில் நடைபெறவுள்ள தமிழ்மாருதம் இலக்கிய விழாவில் பங்கேற்க பலாலி ஊடாக வருகை தரும் இலக்கியச்சுடர் த. இராமலிங்கம் நாலை சனிக்கிழமை மாலை யாழ்ப்பாணத்தில் அறிவாலயம் ஆளுமை விருத்தியத்தின் ஏற்பாட்டில் இலக்கிய நிகழ்வில் பங்கேற்கவுள்ளார்.

இந்த நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு ஆர்வலர்களை – ஏற்பாட்டாளர்கள் அழைக்கின்றனர்.

## உயர்தரப் பரீட்சை முடிவு மேயில்

க.பொ.த உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் மே மாத தொடக்கத்தில் வெளியிடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

மே மாதத்தின் மத்தியில் க.பொ.த சாதாரண தர பரீட்சையை நடத்துவதற்கான அட்டவணைகள் ஏற்கனவே முடிவு செய்யப்பட்டுள்ளன என அமைச்சர் குறிப்பிட்டார்.

க.பொ.த சாதாரண தர பரீட்சை விடைத்தாள் திருத்தும் நபர்கள் சுமார் 35,000 பேர் இருக்கின்றனர் எனவும், க.பொ.த உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் நபர்கள் சுமார் 19,000 பேர் இருக்கின்றனர் எனவும், இவர்கள் அனைவருக்கும் திருப்திகரமான கொடுப்பனவு கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது எனவும் அமைச்சர் சுசில் பிரேமஜயந்த மேலும் குறிப்பிட்டுள்ளார்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# எது சிறப்புரிமை?

நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் தனக்கு இழைக்கப்படுகின்ற அநீதிக்கு எதிராக நாட்டின் மிக உச்ச நீதிமன்றமான உயர் நீதிமன்றத்தை அணுகி, முறையிட்டு, நிவாரணம் கோரும் அடிப்படை உரிமை பிரதானமானதாக உள்ளது. நாடாளுமன்றச் சிறப்புரிமை என்ற பெயரில் அத்தகைய மக்களின் உரிமையை பறிப்பதற்கு நாடாளுமன்ற மட்டத்தில் முயற்சி எடுக்கப்படுவதை கண்டிக்கிறோம். பிரஜைகளின் அத்தகைய உரிமையை நிலை நாட்டுவதற்காக நாட்டின் பிரதான சட்ட அமைப்பாக நாம் போராடுவோம்."- இப்படி இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் பகிரங்க அறிக்கை ஒன்றின் மூலம் தெரிவித்து இருக்கின்றது.

நீதித்துறையின் சுதந்திரத்தைப் பலவீனப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்போது, எந்தச் சந்தர்ப்பத்திலும் மௌனம் காக்கப்போவதில்லை என்றும் அது வலியுறுத்தியுள்ளது.

இலங்கையின் கலால் சட்டங்கள் மற்றும் அது தொடர்பான ஒழுங்கு விதிகளை மீறி மதுபான சாலைகளுக்கு கண்மூடித்தனமாக உரிமங்கள் அள்ளி வீசி வழங்கப்படுகின்றன. இது மக்களின் அடிப்படை உரிமையை மீறும் செயற்பாடு என்று தெரிவித்து, உயர் நீதிமன்றத்தில் மூன்று மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு, நான்கு, ஐந்து தவணைகள் அவை பரிசீலனைக்கு எடுக்கப்பட்டு, அவற்றை விசாரணைக்கு ஏற்கவும், அவை சம்பந்தமாக நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவுகளை வழங்கவும் தயாரான சமயத்தில் நாடாளுமன்றச் சிறப்புரிமைகள் என்ற விவகாரத்தைக் கிளப்பி, அந்த நீதிமன்ற விசாரணைகளை முடக்குவதற்கு முயற்சி எடுக்கப்பட்டிருந்தது.

அதை ஒட்டியே மேற்படி கண்டன அறிக்கையை இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம் வெளியிட்டு இருக்கின்றது.

"மதுபான சாலை உரிமங்களை விநியோகிப்பதும், அவற்றின் மூலம் வரிகளை அறவிடுவதும் நிதி வருமானம் சம்பந்தப்பட்ட நாடாளுமன்ற விவகாரமாகும். நாடாளுமன்றத்துக்குரிய பிரத்தியேக உரிமை இது. அதை நாடாளுமன்றமே கையாள வேண்டும். அதில் நீதிமன்றம் தலையிட்டு உத்தரவிட முடியாது. உத்தரவிடக் கூடாது. அப்படி உத்தரவிட வழி செய்யும் அடிப்படை உரிமை மீறல் மனுக்களை உயர் நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்துள்ளது. அது நாடாளுமன்றத்தின் சிறப்பு உரிமையில் தலையிடுவதாகும். எனவே இவ்விடயத்தில் நாடாளுமன்ற சிறப்புரிமைக் குழு தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்" - என்று இந்த வாரம் நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் சுட்டிக்காட்டி இருக்கின்றார் என்று கூறப்படுகின்றது.

இதனை அடுத்து இந்த விடயத்தை நாடாளுமன்றச் சிறப்புரிமைக் குழுவின் பரிசீலனைக்கு கையளித்திருக்கின்றார் சபாநாயகர்.

இதை ஒட்டியே இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் கண்டன அறிக்கை இப்போது வெளியே வந்திருக்கின்றது.

தனது அரசியல் இலக்குகளை அடைவதற்கு தவறான முறையில் நாடாளுமன்ற சிறப்புரிமைகளை பயன்படுத்துவது ஆட்சியாளர்களின் வழமையான பண்பியல்புதான். அந்த இலக்குகளை அடைவதற்கு மக்களின் அடிப்படை உரிமைகளை மிதிப்பதும், அந்த அடாத்தான செயலுக்கு நாடாளுமன்ற சிறப்புரிமையைக் காவலரணாகப் பயன்படுத்த முயல்வதும் ஆட்சித் தரப்புகளின் பரவணிப் பழக்கம்தான்.


கடந்த வருடம் நடந்திருக்க வேண்டிய உள்ளூராட்சி தேர்தல்களை அதற்கான வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, ஒரு பகுதி வாக்குச்சீட்டுகளும் அச்சான பின்னர், அதற்கான நிதி ஒதுக்கீட்டை வெட்டியதன் மூலம் நிரந்தரமாக தடுத்து நிறுத்தி இருக்கின்றனர் ஆட்சியாளர்கள்.

உள்ளூராட்சித் தேர்தலை மறுத்தமை தங்களின் அடிப்படை உரிமை மீறல் என்று சாதாரண பொது மக்கள் - நாட்டின் குடிமக்கள் - உயர்நீதிமன்றத்திடம் முறையிட்டபோது, நிதியை ஒதுக்கீடு செய்யும் நிதி அமைச்சரின் பணி நாடாளுமன்றத்தின் தத்துவங்களுக்கு உட்பட்டது, அதில் உயர் நீதிமன்றம் தலையிட முடியாது, தலையிடுவது நாடாளுமன்றத்தின் சிறப்புரிமையில் அத்துமீறுவதாகும் என்று நாட்டின் ஜனாதிபதி வரை பகிரங்கமாக அறிவித்து, நீதித்துறைக்கு அச்சுறுத்தல் விடுக்கும் செயற்பாடு இடம் பெற்றது.

ஆக, மக்களின் வாக்குரிமையை - அரசமைப்பு மூலம் தேர்தல் ஆணைக் குழுவினால் முன்னெடுக்க வலியுறுத்தப்பட்ட பொறுப்பை - இலகுவாகத் தட்டிக் கழித்து அந்த உரிமையை மக்களுக்கு வழங்காமல் பறித்து விட்டு, அத்தவறை நாடாளுமன்றச் சிறப்புரிமை என்ற காப்பரணால் மூடி மறைத்துத் தப்புகின்றது ஆட்சி பீடம்.

இந்த நாடாளுமன்றச் சிறப்புரிமைக் கயிற்றை நீதிமன்றம் எந்த நேரமும் சகித்துப் போகும் என்பதல்ல. மதுபான சாலைகளுக்கு உரிமம் வழங்கும் விடயத்தில் உயர் நீதிமன்றம் தற்போது வழங்கி இருக்கும் இடைக்காலத்தடை அதைத்தான் காட்டுகின்றது.

இலங்கையில் நீதித்துறை உஷாராக இருந்தால் நாடாளுமன்றத்தின் இத்தகைய தவறான எத்தனங்கள் பயனளிக்க மாட்டா என்று நம்பலாம்.




# சக்திவாய்ந்த சூரிய கிரகணம் அமெரிக்காவில் ஏப்ரல் 8 இல் நயாகராவில் அவசர நிலை!

எதிர்வரும் ஏப்ரல் 8 ஆம் திகதி சக்திவாய்ந்த சூரிய கிரகணம் நிகழ உள்ளதால் அமெரிக்காவின் நயாகராவில் அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் 8 ஆம் திகதி தோன்றும் இந்த வானியல் அதிசயம் வட அமெரிக்கா முழுவதும் தெரியும். இந்த நிலையில் வட அமெரிக்காவில் சூரிய கிரகணம் நிகழ உள்ளதால் நயாக ராவில் அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 1979 ஆம் ஆண்டுக்குப் பின்னர் நயாகராவில் சூரிய கிரகணம் தென்பட உள்ளதால் லட்சக் கணக்காக மக்கள் அங்கு குவிய வாய்ப்புள்ளது. இதன் காரணமாகவே அங்கு அவசரநிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

நயாகரா நீர்வீழ்ச்சி உலக புகழ்பெற்றது. 8 ஆம் திகதி சூரிய கிரகணம் நிகழ உள்ள நிலையில், அது நயாகரா நீர்வீழ்ச்சியில் பிரதிபலிக்கும்.

இந்த நிகழ்வைக் காண ஏராளமான பொது மக்கள் அங்கு கூட வாய்ப்புள்ள நிலையில், அவசர நிலை அறிவிக் கப்பட்டுள்ளது என்று நயாகரா பிராந்தியத் தலைவர் ஜிம் பிராட்லி தெரிவித்துள்ளார்.

சூரிய கிரகணத்தின் அன்று மில்லியன் கணக்கான மக்கள் நயாகரா நீர்வீழ்ச்சியில் கூடுவார்கள் என்று பொலி ஸார் மதிப்பிட்டுள்ளனர்.


சூரிய கிரகணம் நிகழும் முன் பொது மக்கள் அத்தியாவசிய தேவைகளை இருப்பு வைத்துக் கொள்ளுமாறும் அறிவுறுத்தப் பட்டுள்ளது.

சாலை விதிகளை பின்பற்றுமாறும் சூரிய கிரணத்தை சாலையில் நின்று படங்கள் எடுக்க வேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சூரிய கிரகணத்தை முன்னிட்டு நயாகராவில் உள்ள பள்ளிகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

சூரிய கிரகணத்தை நேரடியாக பார்ப்பதை தவிர்த்து ஐ.எஸ்.ஓ. 12312-2 சான்றளிக்கப்பட்ட கண்ணாடிகளைப் பயன்படுத்துமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# ஜப்பானில் நிலநடுக்கம்; சுனாமி எச்சரிக்கை விடுப்பு!



ஜப்பானின் ஹோன்ஷூவின் கிழக்கு கடற் கரை பகுதியில் 2 ஆவது முறையாக நேற்றுக் காலை சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட் டுள்ளது.

இது ரிக்டர் அளவுகோலில் 6.3 ஆக பதி வாகியுள்ளது என்று ஐரோப்பிய - மத்திய தரைக்கடல் நிலநடுக்க அறிவியல் மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கம் 32 கிலோ மீற்றர் ஆழத் தில் மையம் கொண்டிருந்ததாகவும், நில நடுக்கத்தால் உயிரிழப்பு அல்லது பெரும் சேதங் கள் ஏற்படவில்லை என்றும் தகவல்கள் கிடைத் துள்ளன.

இருப்பினும், உள்ளூர் அதிகாரிகள் சூழ்நி லையை மதிப்பீடு செய்து முன்னெச்சரிக்கை யாக சுனாமி எச்சரிக்கையை வெளியிட்டுள்ள னர்.

ஜப்பானின் அண்டை நாடான தாய்வானில் 7.4 ரிக்டர் அளவில் பதிவான சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தில் ஒன்பது பேர் உயிரிழந்தனர். ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# 500 அடி ஆழ்துளைக் கிணற்றில் விழுந்த குழந்தை உயிருடன் மீட்பு!



500 அடி ஆழம் உள்ள ஆழ்துளை கிணற்றுக்குள் விழுந்த 14 மாதக் குழந்தை சாத்விக்கின் அசைவுகளை ஆழ்துளை கிணற்றுக்குள் கமரா விட்டு மீட்பு பணியினர் தொடர்ந்து கண்காணித்து வந்தனர்.

இந்த நிலையில், நேற்றுக் (04) காலை முதல் மீட்புப் பணியை தீவிரப்படுத்திய மீட்பு குழுவினர் 17 மணி நேர போராட்டத்துக்குப் பிறகு குழந்தையை உயிருடன் மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட குழந்தைக்கு தொடர்ந்து தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

கர்நாடக மாநிலம் விஜயபுரா மாவட்டம் இன்டி தாலுகா லச்சனா கிராமத்தை சேர்ந்த 14 மாத சாத்விக் என்ற குழந்தை மூடப்படாமல் இருந்த 500 அடி ஆழம் உள்ள ஆழ்துளை கிணற்றில் விழுந்துள்ளார்.

இந்த சம்பவமானது நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சதீஷ் முஜகொண்டா (30) இவரது மனைவி பூஜா (26) இவர்களுடைய 14 மாத ஆண் குழந்தையான சாத்விக் என்பவரே இவ்வாறு ஆழ்துளை கிணற்றில் விழுந்துள்ளார்.

பெற்றோரிற்கு சொந்தமான நான்கு ஏக்கர் நிலத்தில் கரும்பு மற்றும் எலுமிச்சை பயிரிட்டிருந்த நிலையில் தற்போது மழையில்லாததால் பயிர்களுக்கு தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டதையடுத்து ஆழ்துளை கிணறு தோண்டியுள்ளனர்.

இவ்வாறு 500 அடி தோண்டியும் தண்ணீர் கிடைக்காமையால் அவர் அதை மூடாமல் விட்டுள்ளனர். இந்த நிலையில் நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் 14 மாத குழந்தை சாத்விக் அந்தக் கிணற்றுக்கு அருகே விளையாடி கொண்டிருந்த போது கிணற்றினுள் தவறி விழுந்துள்ளார்.

இதனால் அதிர்ச்சி அடைந்த பெற்றோர் பொலிஸ் மற்றும் தீயணைப்பு துறையினருக்கு தகவல் தெரிவித்தனர்.

அவர்கள் உடனடியாக சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து குழந்தையை மீட்கும் பணியை தொடங்கிய நிலையில் குழந்தை சாத்விக் 16 அடி ஆழத்தில் சிக்கிக் கொண்டிருப்பது தெரியவந்தது.

இதையடுத்து முதல் கட்டமாக மீட்பு குழுவினர் ஆழ்துளை கிணற்றுக்குள் குழந்தைக்கு பைப் மூலம் ஒட்சிசன் செல்ல ஏற்பாடு செய்ததுடன் மேலும் ஆழ்துளை கிணற்றுக்குள் கமராக்களை உள்ளே விட்டு குழந்தையின் அசைவைத் தொடர்ந்து கண்காணித்தனர்.

ஆழ்துளை கிணற்றை ஒட்டி இணையாக ஜே.சி.பி. மூலம் குழி தோண்டி குழந்தையை உயிருடன் மீட்டுள்ளனர்.

# பாஜக ஆட்சிக்கு வருமானால் நாட்டில் ஜனநாயகம் இருக்காது

## இந்திய கம்யூனிஸ்ட் மாநில தலைவர் முத்தரசன் குற்றச்சாட்டு

ஐடி, இடி, சிபிஐ போன்ற அமைப்புகள் நிலைகுலைந்து மோடியின் உத்தரவை செயல்படுத்தக் கூடிய அமைப்புகளாக மாறிவிட்டன என்று இந்திய கம்யூனிஸ்ட் மாநில தலைவர் முத்தரசன் குற்றம் சாட்டியுள்ளார்.

மேட்டூரில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநிலத் தலைவர் முத்தரசன் உரையாற்றுகையில்,

8 ஆவது மக்களவைத் தேர்தல் மிகுந்த அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தது. கடந்த 10 ஆண்டுகளாக பாஜக ஆட்சி நடந்து வருகிறது. தற்போது மீண்டும் மூன்றாவது முறையாக ஆட்சிக்கு வருவோம் கூறி வருகின்றனர். இடங்களின் எண்ணிக்கைகளைப் பொறுத்து பாஜக கூறுவது மக்களை ஏமாற்றும் வேலை.

பாஜக ஆட்சிக்கு வந்தால் நாட்டில் ஜனநாயகம் இருக்காது. ஜனநாயகம் முறைப்படி எந்த கட்சி வேண்டுமானால் ஆட்சியில் இருக்கலாம். ஜனநாயகத்தை நிலை குலைத்து விட்டு, சர்வாதிகார ஆட்சி, பாசிச ஆட்சி நடத்துவது மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். எதிர்க்கட்சிகள் இல்லாத இந்தியாவை உருவாக்க வேண்டும் என மோடி செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்.

அரசமைப்புச் சட்டத்தால் உருவாக்கப்பட்ட அமைப்புகளை சீர்குலைத்து விட்டு எதிர்க்கட்சிகளுக்கு எதிரான முறையில் செயற்பட கூடிய நடவடிக்கைகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஐடி, இடி, சிபிஐ போன்ற அமைப்புகள் நிலைகுலைந்து மோடியின் உத்தரவை செயற்படுத்தக் கூடிய அமைப்புகளாக மாறிவிட்டன.

மோடி 2014 இல் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. பெட்ரோல் டீசல் விலை உயர்வுக்கு எண்ணெய் நிறுவனங்கள்தான் தீர்மானம் செய்கின்றன. எங்களுக்கு சம்பந்தம் இல்லை என கூறுகின்றனர். ஆனால் தேர்தல் அறிவிப்பு, பிறகு லீற்றருக்கு இரண்டு ரூபா குறைக்க உத்தரவு அளித்ததாக கூறுகின்றனர்.

உத்தரவு போடுவதற்கான அதிகாரம் உள்ள மத்திய அரசு, விலை உயரும் போது உத்தரவு போட முடியாததுக்கான காரணம் என்ன? ஊழலை ஒழிப்பதற்காக தான் நாங்கள் அவதாரம் எடுத்திருக்கிறோம் என மோடி கூறுகிறார். ஊழல்வாதிகள் தான் ஒன்று சேர்ந்து கூட்டணி அமைத்திருக்கிறார்கள் என விமர்சனம் செய்கிறார்.

மோடிக்கு ஊழலை பற்றி பேச கடுகளவு கூட தகுதி இல்லை. தேர்தல் பத்திரம் ஊழல் குறித்து, உலக அளவில் இப்படிப்பட்ட ஓர் ஊழல் நடைபெறவில்லை என ஒன்றிய




நிதியமைச்சர் கணவர் குற்றம் சாட்டியுள்ளார். மகா ஊழலை செய்துவிட்டு மற்ற கட்சிகளை பார்த்து குற்றம் சொல்வது தப்பித்துக் கொள்வதற்கான ஒரு முயற்சி. இந்த முயற்சிகள் வெற்றி பெறாது.

தமிழகத்துக்கு மோடி எத்தனை முறை வேண்டுமானாலும் வரலாம். தமிழ் மொழி, மக்கள் மீதும் பாசம் கொண்டதாகவும், புத்துணர்ச்சி பெற்றுச் செல்வதாகக் கூறுகிறார். மொழிக்கு ஒதுக்கப்படும் வளர்ச்சியில் இந்தி, சமஸ்கிருதம் மற்றும் தமிழ் மொழிக்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்படுகிறது எனத் தெரிவிக்க வேண்டும்.

பிரதமருடைய பேச்சுக்கும் செயலுக்கும் சம்பந்தமில்லாமல் இருக்கிறது. மாநில உரிமைகள் நீண்ட கால பிரச்சினையாக உள்ளது. தமிழக உள்பட நாற்பது தொகுதியில் இந்தியா கூட்டணி வெற்றி பெறும். சீனாவால் அருணாச்சல பிரதேசத்தில் 30 கிராமங்களில் போர்டுகள் வைக்கப்பட்டுள்ளது. இதனை மூடி மறைக்கவே கச்சத்தீவை பற்றி ஒரு நாடகத்தை மோடி நடத்தி வருகிறார்.

மக்களவைத் தேர்தல் ஜனநாயக முறைப்படி நடப்பது நாட்டுக்கு நல்லது. தேர்தல் ஆணையம் ஜனநாயகம் முறையில் நூற்றுக்கு நூறு சதவீதம் இயங்குகிறது என்பது உறுதிப்படுத்த முடியவில்லை. தேர்தல் கால அட்டவணை தயாரிப்பது தேர்தல் ஆணையமா, மோடியா என தெரியவில்லை. மோடி தயாரித்து பட்டியலைத்தான் தேர்தல் ஆணையம் வெளியிடுகிறது.

கட்சிகளுக்கு சின்னம் ஒதுக்குவதில் பாரபட்சம் காண்பிக்கப்படுகிறது. ஆனால் பாஜக கூட்டணி கட்சிகளுக்கும் கட்சியின் சின்னம் எளிதாகக் கிடைக்கிறது. தேர்தல் ஆணையம் நேர்மையான முறையில் செயல்படவில்லை. ஜனநாயக முறைப்படி தேர்தல் நடந்தால் பாஜக வெற்றி பெறாது".- என்றார்.



# வெடுக்குநாறிமலையில் பொலிஸ் அள்ளிச் சென்ற பொருள்கள் நேற்று நீதிமன்றத்தினால் விடுவிப்பு!

(கே.வசந்தன்)

வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயத்தில் இருந்து பொலிஸாரால் கொண்டு செல்லப்பட்ட பொருள்கள் வவுனியா நீதிமன்றத்தால் நேற்று விடுவிக்கப்பட்டன.

சிவராத்திரி தினத்தன்று வெடுக்கு நாறிமலை ஆதிலிங் கேஸ்வரர் ஆலயத்தில் பக்தர்கள் பூசை வழி பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது சப்பாத்துக்களுடன் ஆலயத் திற்குள் புகுந்த நெடுங்கேணி பொலிஸார் அங்கு இருந்த 8 பேரைக் கைது செய்தமையுடன் ஆலயத்தில் இருந்த பொருள்களையும் எடுத்துச் சென்றி ருந்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கடந்த 19 ஆம் திகதி நீதி மன்றத்தால் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

இதனைத் தொடர்ந்து, பொலிஸாரால் கொண்டு செல்லப்பட்ட பொருள் கள் நீதிவான் நீதிமன்றின் அனு மதியோடு நேற்று விடுவிக்கப்பட்டுள்ளன.



# குருந்துஓயாவில் விபத்து இருவருக்குப் படுகாயம்

கந்தப்பளை – ஹைபொரஸ்ட் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட குருந்து ஓயா பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இரண்டு பேர் படுகாயமடைந்துள்ளனர் என்று ஹைபொரஸ்ட் பொலிஸ ார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.

ஹைபொரஸ்ட் – குருந்து ஓயாவிலிருந்து இராகலை நோக்கி பயணித்த மரக்கறி லொறி எதிர் திசையில் வந்த ஓட்டோவுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதன்போது ஓட்டோவில் பயணித்த ஒருவரும், லொறியில் பயணித்த ஒருவரும் படுகாயமடைந்து நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹைபொரஸ்ட் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.







### இரண்டு உயிர்களைப் பலியெடுத்த

# இணுவிலில் ரயில்வேக் கடவைக்கு சமிக்ஞை விளக்கு,பாதுகாப்பு கதவு

இரண்டு உயிர்களைப் பலியெடுத்த இணுவில் ரயில் கடவைக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியில் சுமார் 80 லட்சம் ரூபா செலவில் சமிக்ஞை விளக்கு மற்றும் பாதுகாப்பு கதவு ஆகியன பொருத்தப்பட்டு, இன்று அதன் செயற்பாடுகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

கடந்த பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி, வானில் பயணித்துக் கொண்டிருந்த இளம் குடும்பத்தினர், இணுவில் பகுதியில் அமைந்திருந்த இந்த பாதுகாப்பற்ற ரயில் கடவையை கடக்க முற்பட்ட போது ரயிலிலுடன் மோதுண்டனர். இதனால் இளம் குடும்பத் தலைவரும் சில மாதங்களேயான பச்சிளம் குழந்தையும் அந்த இடத்திலேயே பரிதாபகரமாக உயிரிழந்தனர். குழந்தையின் தாய் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்த விபத்தை அடுத்து, பிரதேச மக்களினால் ரயில் கடவையில் நடத்தப்பட்ட எதிர்ப்புப் போரட்டத்தை அடுத்து, அந்தப் பகுதிக்குச் சென்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மக்களுடன் கலந்துரையாடி பாதுகாப்பற்ற ரயில் கடவைக்குத் தற்காலிகத் தீர்வொன்றை உடனடியாக நடைமுறைப்படுத்தியமையுடன், நிரந்தர தீர்வாக ஓசை எழுப்பும் வகையிலான ஒளி சமிக்ஞை விளக்கு மற்றும் பாதுகாப்புப் படலை ஆகிவற்றை பொருத்துவதற்கான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அரசாங்கத் தரப்புக்களின் ஊடாக முன்னெடுத்திருந்தார்.

இந்நிலையில், சுமார் 80 லட்சம் ரூபா செலவில் ரயில்வே திணைக்களத்தினால் பொருத்தப்பட்ட சமிக்ஞை விளக்குக் கட்டமைப்பின் செயற்பாடுகளை நேற்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.











# பொலிஸ் மோப்ப நாய்களின் சாகச நிகழ்வு வவுனியாவில்!

(கே.வசந்தன்)

வவுனியாவில் பொலிஸ் மோப்ப நாய்களின் சாகச நிகழ்வு சிறப்பாக இடம்பெற்றது.

வவுனியா, நகரசபை மைதானத்தில் நேற்று இடம்பெற்ற சித்திரை கலை விழா நிகழ்வின் போது இந்த சாகச நிகழ்வு இடம்பெற்றது.

கண்டியில் இருந்து கொண்டு அழைத்து வரப்பட்ட பயிற்றப்பட்ட பொலிஸ் மோப்ப நாய்கள், இராட்டினத்தில் சுற்றுதல், தலையில் நீர் கொண்டு செல்லல், சிறுவர்களை இராட்டினத்தில் ஏற்றிச் சுற்றுதல், மோட்டர் சைக்கிளில் பயணித்தல், வளையத்தின் ஊடாகப் பாய்தல், நெருப்பு வளையத்தின் ஊடாகப் பாய்தல், துப்பாக்கிச் சூடு நடத்தியரை விரட்டிப் பிடித்தல் போன்ற பல சாகச நிகழ்வுகளை மேற்கொண்டிருந்தன.

மோப்ப நாய்களின் சாகசத்தை பார்பதற்காக பலரும் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.


























# இலங்கை விமானப்படையில் சேர்வதற்கான நேர்முகத் தேர்வுக்கு யாழில் 53 பேர் சமுகம்

(ந.லோகதயாளன்)

இலங்கை விமானப்படையில் ஆள்களைச் சேர்ப்பதற்காக யாழ்ப்பாணத்தில் இரு நாள்களாக இடம்பெற்ற நேர்முகத் தேர்வில் 53 பேர் பங்கு கொண்டனர்.

யாழ்ப்பாணம் பலாலி விமானப் படைத் தளத்தில் கடந்த இரு தினங்களாக இந்த நேர்முகத் தேர்வு இடம்பெற்றது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற தேர்வில் 37 பேரும், அதிகாரிகளிற்கான நேர்முகத் தேர்வு நேற்றைய தினம் இடம்பெற்ற சமயம் 17 பேரும் தோற்றியுள்ளனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற நேர்முகத் தேர்வில் 28 ஆண்களும், 9 பெண்களும் க.பொ.த உயர்தரத் தகுதிகளுடனும் நே ற்றைய தினம் இடம்பெற்ற நேர்முகத் தேர்வில் 15 ஆண்களும், இரு பெண்களுமாக 17 பேர் பட்டதாரி தகுதிகளுடனும் தோற்றியுள்ளனர்.

பலாலி விமானப்படைத் தளத்தில் இடம்பெற்ற இந்த நேர்முகத் தேர்விற்கு வசாவிளான் வரைச் சென்றவர்கள், அங்கிருந்து விமானப்படையினரின் வாகனங்களில் விமானப்படை தளத்தின் உள்ளே அழைத்துச் செல்லப்பட்டனர்.

# கட்சிகளை உடைப்பதற்கான எதிர்பார்ப்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளார்!

## யாழில் இப்படிக் கூறுகின்றார் இராதாகிருஷ்ணன் எம்.பி.



"கட்சிகளை உடைப்பதற்கான எதிர்பார்ப்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இருக்கின்றார்.

"ஜனாதிபதி தேர்தலும் நாடாளுமன்றத் தேர்தலும் ஒன்றாக நடக்க வேண்டும் என்ற கோடி காட்டலும் அரசாங்கப் பக்கத்தில் இருந்து வந்திருக்கின்றது.

"இது பெரும்பாலும் பேசப்படுகின்ற விடயமாக இருந்தாலும் இதிலே நன்மையும் இருக்கின்றது. தீமையும் இருக்கின்றது" – என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் –

இந்த நாட்டிலே பொருளாதாரப் பிரச்சினை ஏற்பட்டதன் காரணமாக இரண்டு தேர்தல்களுக்கு செலவழிக்கின்ற செலவை ஒரே தேர்தலாக வைக்கின்ற போது குறைக்க முடியும். அந்த வகையிலே இந்தத் தேர்தல்கள் இரண்டையும் ஒன்றாக வைத்தால் செலவை குறைக்க முடியும் என்ற நம்பிக்கை இருக்கின்றது.

அதே நேரத்தில் காட்சிகளுக்கு இடையிலே பலவிதமான குழப்பங்கள் நிலவுகின்ற காரணத்தினால் எந்த கட்சியில் இருந்து வாக்கு கேட்பது? எவ்வாறு உடைத்துக் கொண்டு செல்வது? யாரை உடைக்கலாம்? என்ற எதிர்பார்ப்புகளோடு இருக்கின்ற கட்சிகளுக்கு இது ஒரு சிக்கலாக அமையும். ஏனென்றால் ஜனாதிபதி ஒருவர் வந்த பிறகுதான், அடுத்து ஜனாதிபதியின் கட்சி அதிகாரத்துக்கு வருவது மரபாக உள்ளது. அல்லது நாடாளுமன்றத் தேர்தலுக்கு பிறகு வருகின்ற தலைவர் அதிகாரத்தைக் கைப்பற்றுகின்ற மரபு இங்கு இருக்கின்றது.

ஆனால் இந்த தேர்தல்களை ஒன்றாக வைத்தால் இந்தச் சிக்கல் வரும் என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக வருவதற்கான எதிர்பார்ப்புகள் இருந்தாலும் அவர் எல்லா கட்சிகளையும் உடைத்து, அவற்றைத் தம் பக்கம் இழுப்பதற்கான வசதிகள் என்னவென அவர் பார்த்துக் கொண்டிருக்கின்றார். இன்றைய சூழ்நிலையில் கட்சிகளைப் பிளந்து உடைக்கின்ற விடயம் சாத்தியமற்றதாகவே இருக்கும். – என்றார்.





# வவுனியாவில் மோட்டர் சைக்கிளை மோதி விட்டுத் தப்பிச் சென்ற கார்!

## காயமுற்ற இருவர் வைத்தியசாலையில்

**(கே.வசந்தன்)**

வவுனியாவில் கார் ஒன்று மோட்டர் சைக்கிளை மோதி விட்டுத் தப்பிச் சென்றுள்ளது. அந்த விபத்தில் இருவர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து வவுனியா, வைரவபுளியங்குளம், ரயி நிலைய வீதியில் நேற்று மாலை இடம்பெற்றது.

வவுனியா நகரில் இருந்து ரயிக் நிலைய வீதி ஊடாக மோட்டர் சைக்கிள் ஒன்று சென்று கொண்டிருந்த போது பின்னால் வந்த கார் அந்த மோட்டர் சைக்கிளுடன் மோதி விபத்தை ஏற்படுத்தி விட்டு நிறுத்தாது தப்பிச் சென்றுள்ளது.

விபத்தில் மோட்டர் சைக்கிளில் பயணித்த தாயும், மகனும் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சேதமடைந்த மோட்டர் சைக்கிள் பொலிஸாரால் எடுத்துச் செல்லப்பட்டது. தப்பிச் சென்ற காரை அப் பகுதியில் நின்ற வர்கள் எடுத்த படம் மற்றும் சிசீரீவி கணொளி உதவியுடன் வவுனியா பொலிஸார் தேடி வருகின்றனர்.





# காலியில் இளைஞர் கொலை; நால்வர் பொலிஸாரால் கைது!

காலி தங்கெதர பிரதேசத்தைச் சேர்ந்த 34 வயதுடைய ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார் எனக் காலி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காலி, தங்கேதர டிடீஸ் வத்த பிரதேசத்தில் இந்த கொலை இடம்பெற்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தனிப்பட்ட தகராறு காரணமாக இந்த கொலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதேவேளை, கொலைச் சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் நால்வரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சடலம் கராப்பிட்டிய வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை காலி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# நாணய நிதியத்தின் திட்டத்தில் இலங்கை முன்னேறியுள்ளது!

## அமெரிக்கத் தூதுவர் தெரிவிப்பு

சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தில் இலங்கை பெரும் முன்னேற்றம் கண்டுள்ளது என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் வசந்த கால மாநாட்டுக்காக, நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க வொஷிங்டனுக்குச் செல்வதற்கு முன்னதாக, அவரைச் சந்தித்தபோது இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங் இதனை தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தில் இலங்கை பெரும் முன்னேற்றம் கண்டுள்ளது.

இதன் மூலம் பொருளாதார ஸ்திரத்தன்மை, வளர்ச்சியை ஊக்குவித்தல் மற்றும் மக்களின் நலனை மேம்படுத்தும் நிதியுதவிக்கான இறுதி நடவடிக்கைகளை இலங்கை எடுக்க முடியும் என்று அமெரிக்கா நம்புகிறது என்றும் தூதுவர் கூறியுள்ளார்.

# கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி வழக்கு விசாரணை மே 16ஆம் திகதிக்கு

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப் பணியை மீள ஆரம்பிப்பது தொடர்பான வழக்கு விசாரணை அடுத்த மாதம் 16 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குத்தொடுவாய் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழியின் முதல் கட்ட அகழ்வானது கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் ஆறாம் திகதி ஆரம்பமாகி 11 நாள்கள் நடைபெற்ற நிலையில் 17 உடற்பாகங்கள் மீட்கப்பட்டன.

இதனை தொடர்ந்து தற்காலிகமான இடைநிறுத்தப்பட்ட அகழ்வுப்பணிகள் மீண்டும் நவம்பர் மாதம் 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

தொடர்ச்சியாக ஒன்பது நாள்கள் நடைபெற்ற இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகளில் மொத்தமாக 40 எலும்புக் கூட்டு தொகுதிகள் மீட்கப்பட்டன.

இந்த அகழ்வு ஆய்வு நடவடிக்கையின் இறுதி நாள்களில் மேற்கொள்ளப்பட்ட ஸ்கான் எனப்படும் வருடி பரிசோதனை மூலம் மனிதப் புதைகுழிக்கு மேற்கு பக்கமாக இரண்டு மீற்றர் நீளத்துக்கு உடலங்கள் காணப்படுகின்றன என்று கண்டறியப்பட்டிருந்தது.

இதனையடுத்துக் இந்த அகழ்வுப் பணி கடந்த மாதம் நடைபெறத் திட்டமிடப்பட்டிருந்த நிலையில் நிதி கிடைக்கப் பெறாமையால் வழக்குத் தவணையிடப்பட்டிருந்தது.

இந்நிலையில் இவ்வழக்கு நேற்று முல்லைத்தீவு நீதிவான் தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின் போது அகழ்வு பணியை நடத்த இன்னும் நிதி கிடைக்கப் பெறவில்லை என முல்லைத்தீவு மாவட்ட செயலக பிரதம கணக்காளர் மயில்வாகனம் செல்வரட்ணம் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தற்போது அகழ்வுப் பணிக்கெனப் போடப்பட்டுள்ள பாதீடு அதிகமாக காணப்படுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் பாதீட்டைச் சீர்செய்து அனுப்பி, நிதியைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று அவர் கூறியுள்ளார்.

அத்துடன் கொக்குத்தொடுவாய் மனித புதைகுழியின் அகழ்வாய்வு நடவடிக்கையில் ஈடுபட்ட தொல்லியல் திணைக்கள பேராசிரியர் ராஜ் சோமதேவவால் வழக்கு விசாரணையின் போது நீதிமன்றில் இடைக்கால அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி கொக்குத்தொடுவாய் மனிதப் புதை குழியில் மீட்கப்பட்ட எச்சங்கள் 1994 ஆண்டு தொடக்கம் 1996 ஆம் ஆண்டு காலப் பகுதிக்கு உரியவை என அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இந்த நிலையில் வழக்கு விசாரணையை அடுத்த மாதம் 16 ஆம் திகதிக்கு முல்லைத்தீவு நீதிவான் தர்மலிங்கம் பிரதீபன் ஒத்திவைத்தார்.

# இலங்கை இளைஞர்கள் இருவர் டுபாயில் ஒரே நாளில் உயிரிழப்பு!

இலங்கையை சேர்ந்த இளைஞர்கள் இருவர் டுபாயில் உயிரிழந்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

புத்தளம், ஆராச்சிக்கட்டுவ பகுதியை சேர்ந்த இருவர் டுபாயில் பணியாற்றி வந்த நிலையில் உயிரிழந்துள்ளனர்.

இருவரும் ஒரே நாளில் உயிரிழந்துள்ளனர் என்று தகவல் கிடைத்துள்ளதாக ஆராச்சிக்கட்டுவ பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



கிரிவெல்கெலேயைச் சேர்ந்த 28 வயதான சந்துன் மதுசங்க மற்றும் அண்டன்வில்வத்தையைச் சேர்ந்த ரமேஷ் உதார திலின என்ற 42 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையும் உயிரிழந்துள்ளனர்.

உடல்நிலை மோசமடைந்ததையடுத்து உள்ளூர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர்கள் கடந்த 30 ஆம் திகதி உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.



### றொக்வூட் தேயிலை தோட்டத்தில்

# கம்பி வலையில் சிக்கி மரணித்த சிறுத்தைப் புலியின் சடலம் மீட்பு

தேயிலைத் தோட்டத்தில் அமைக் கப்பட்டிருந்த கம்பி வலையில் சிக்கி உயிரிழந்த நிலையில் சிறுத்தைப் புலியின் சடலம் ஒன்று நேற்று வியாழக் கிழமை கண்டுபிடிக்கப்பட்டதாக நல்ல தண்ணி வனஜீவராசிகள் அலுவலக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நோர்வூட் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட றொக்வூட் தோட்ட தேயிலை தோட்டத்தில் கம்பி வலையில் சிக்கி இந்தச் சிறுத் தைப்புலி உயிரிழந்துள்ளதாக வன விலங்கு அதிகாரிகள் தெரிவித்துள் ளனர்.

சிறுத்தைப் புலியின் சடலத்தைத் தோட்டத் தொழிலாளர்கள் கண்டு தமது அலுவலகத்துக்கு அறிவித்தனர் எனவும் சடலம் பிரேத பரிசோதனைக்காக ரந்தெனிகல வனவிலங்கு கால்நடை வைத்தியசாலைக்குக் கொண்டு செல லப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரி வித்தனர்.

# புத்தளத்தில் மான் இறைச்சியுடன் ஒருவர் கைதாகிப் பின் பிணையில்!

**(கற்பிட்டி எம்.எச்.எம்.சியாஜ்)**

புத்தளம் கல்லடி மீ ஓயா ஆற்றுப் பகுதியில் நேற்று முன்தினம் புதன் கிழமை காலை மான் இறைச்சியுடன் நபரொருவர் புத்தளம் வனஜீவராசிகள் கட்டுப்பாட்டுப் பிரிவினரால் கைது செய் யப்பட்டுள்ளார்.

மானை வேட்டையாடி இறைச்சியை வெட்டிக் கொண்டிருக்கின்றனர் என வனஜீவராசிகள் திணைக்களத்தின ருக்குக் கிடைக்கெப்பெற்ற தகவலுக் கமைய அந்தப் பகுதியில் அவர்கள் சுற்றிவளைப்பை மேற்கொண்டனர்.

இதன்போது ஒருவர் கைது செய் யப்பட்டார். 15 கிலோ இறைச்சி, மான் தலை, மான்தோல், தராசு மற்றும் கத்தி கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கல்லடிப் பகுதியைச் சேர்ந்தவரென வனஜீவராசிகள் கட்டுப்பாட்டுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கைப்பற்றப்பட்ட இறைச்சி மற்றும் ஏனைய பொருட்களுடன் நேற்றைய தினம் புத்தளம் நீதிமன்றத் தில் ஒப்படைக்கப்பட்டார்.

பதில் நீதிவான் மொஹமட் இக்பால் சந்தேகநபரைப் பிணையில் விடுவிப்ப தற்கு உத்தரவு பிறப்பித்ததுடன், எதிர் வருகின்ற 30 ஆம் திகதி வரை வழக்கை ஒத்திவைத்தார்.

# மாவட்ட செயலக சித்திரைக் கலை விழாவில் தோன்றிய வெடுக்குநாறி ஆதி லிங்கேஸ்வரர்!





(கே.வசந்தன்)

வவுனியாவில் இடம்பெற்ற சித்திரைக் கலைவிழாவில் வெடுக்குநாறிமலை ஆதி லிங்கேஸ்வரர் ஆலயம் காட்சிப் படுத்தப்பட்டது.

வவுனியா மாவட்டசெயலகம் மற்றும் மாவட்ட கலாசார அதிகாரசபையின் ஏற்பாட்டில் நகரசபை மைதானத்தில் சித்திரை கலைவிழா நிகழ்வு நேற்றுக் கோலகலமாக ஆரம்பமாகியது.

இதன்போது பல்வேறு விடயங்களை மையப்படுத்திய கண்காட்சிக் கூடங்களும் திறந்து வைக்கப்பட்டன. இந்நிலையில் வவுனியா வடக்கு நெடுங்கேணி வெடுக்குநாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் காட்சிப்படுத்தப்பட்டதுடன், புதூர் நாகதம்பிரான் கோவிலும் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

# மாணவர்களை ஆசிரியர்கள் அடித்துத் துன்புறுத்துவதை அனுமதிக்கவே முடியாது என்கின்றார் வடக்கு ஆளுநர்!



ஆசிரியர்கள் மாணவர்களை அடித்துத் துன்புறுத்துவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என வடக்கு மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்கள் மீது தண்டனை என்ற பெயரில் துன்புறுத்தல்கள் அதிகரித்து வரும் நிலையில், வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸி னால் விசேட அறிவித்தல் ஒன்று விடுக்கப்பட்டுள்ளது.

கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொண்டு மாணவர்களை வளப்படுத்த வேண்டிய ஆசிரியர்களே, மாணவர்களை அடித்து, துன்புறுத்தி வைத்தியசாலைகளில் அனுமதிக்கும் சம்பவங்கள் அண்மைக் காலமாக அதிகரித்துள்ளன. கடந்த சில மாதங்களுக்குள் இவ்வாறாக செயற்பட்ட ஆசிரியர்கள் தொடர்பில், ஆளுநரின் செயலகத்தால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு பின்னர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று (முன்தினம்) பதிவாகிய மூன்று சம்பவங்கள் தொடர்பில் ஆளுநரின் பணிப்புரைக்கு அமைய உடனடி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

“எழுத்தறிவித்தவன் இறைவன்” எனும் கூற்றுக்கு அமைய, இறைவனாகப் போற்றப்படக்கூடிய ஆசிரியர்கள் மாணவர்களுக்குத் துன்பம் இழைப்பதை ஒருபோதும் ஏற்க முடியாது.

கற்றலில் சிக்கல்களை எதிர்நோக்கும் மாணவர்களை எவ்வாறு கற்றலில் ஈடுபடச் செய்வது என்ற யுக்தியை கண்டறிந்து அவர்களுக்கான கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

அதற்காகவே ஆசிரியர்களுக்கான விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டு, அரசினால் ஆசிரிய நியமனம் வழங்கப்படுவதோடு, மாதாந்தக் கொடுப்பனவும் வழங்கப்படுகிறது.

எனினும், ஒருசில ஆசிரியர்கள் மாணவர்களின் நிலையை அறியாது அவர்களை அடித்துத் துன்புறுத்தும் நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே, தற்போது பதிவாகியுள்ள இந்தச் சம்பவங்கள் தொடர்பில் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். இனிவரும் காலங்களில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறாதிருக்க பாடசாலை அதிபர்களும், ஆசிரியர்களும் தங்களின் பொறுப்புக்களை உணர்ந்து கடமைகளை மேற்கொள்ள வேண்டும். அவ்வாறின்றி பொறுப்பற்ற வகையில் செயற்படும் அதிபர், ஆசிரியர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தரப்படுகின்றது. – என்று வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் தெரிவித்துள்ளார்.



# யாழ். மாவட்ட சமுர்த்தி உத்தியோகத்தர்கள் அமைச்சர் டக்ளஸுடன் கலந்துரையாடல்

யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த சமூர்த்தி உத்தியோகத்தர்களுக்கும் அமைச்சர் டக்ளஸ்தேவானந்தாவிற்குமிடையிலான சந்திப்பு ஒன்று நேற்றைய தினம் இடம்பெற்றது.

நேற்றுக் காலை 10 மணியளவில் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் மண்டபம் ஒன்றில் சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் ஏற்பாட்டில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இச்சந்திப்பின்போது யாழ் மாவட்டத்தில் சமூர்த்தி திணைக்களத்தை வினைத்திறனாக கொண்டுநடாத்துவது தொடர்பிலும் மக்களுக்குத் தேவையான சேவைகளை தடையின்றி வழங்குவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

மேலும் சமூர்த்தி உத்தியோகத்தர்கள் அபிவிருத்திச் சங்கத்தை மீளப் புனரமைக்குமாறு உத்தியோகத்தர்கள் நேற்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடன் கோரிக்கை விடுத்தனர். இந் நிலையில் புதிய நிர்வாகத்தை தெரிவு செய்வதற்கான உப குழு ஒன்றும் நேற்று அமைக்கப்பட்டது.

யாழ் மாவட்ட சமூர்த்தித் திணைக்களப் பணிப்பாளர் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவரும் கடற்தொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா, யாழ் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் ம. பிரதீபன் மற்றும் சமூர்த்தி திணைக்கள உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.













# இன்றைய ராசி பலன்கள் - 05.04.2024



## மேஷம்

இன்று உங்கள் செயல்களில் எச்சரிக்கையும் பொறுமையும் தேவை. இன்று சில விதமான இழப்புகளை சந்திக்க நேரலாம். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணிகள் நிலுவையில் இருக்கும். பணியில் தவறுகள் நேரலாம். பணிகளை தரமாக முடித்துக் கொடுக்க திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படலாம். வன்மையாக நடந்து கொள்ளலாம். எனவே மகிழ்ச்சியை தக்க வைக்க இத்தகைய நடத்தையை தவிர்த்தல் நல்லது.

அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக இன்று அதிகம் செலவு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படும். தேவையற்ற செலவுகளின் கவலையும் இன்று காணப்படும்.

இன்று வயிறு உப்பச பாதிப்பு ஏற்படலாம்.



## ரிஷபம்

உங்கள் கடின உழைப்பு மூலம் இன்று வெற்றி கிடைக்கும். உங்கள் சுய முன்னேற்றத்தின் மூலம் நீங்கள் கடினமாக உழைத்து வெற்றியை அடையலாம். இன்று நீங்கள் உங்கள் இலக்குகளை அமைத்துக் கொண்டு அதற்கு முயற்சி செய்வீர்கள்.

பணிநிமித்தமான பயணம் காணப்படும். இது உங்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் திருப்தியும் மகிழ்ச்சியும் ஏற்படும்.

இன்று பண வரவு காணப்படுகின்றது. தேவைகளை பூர்த்தி செய்ய பணம் கிடைக்கும் .



## மிதுனம்

உங்கள் தகவல் பரிமாற்ற திறமை காரணமாக இன்று நீங்கள் வெற்றி பெறுவீர்கள். ஆன்மீக சொற்பொழிவுகளை கேட்பது பக்திப் பாடல்களை கேட்பது போன்ற விஷயங்களில் ஈடுபடுவீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்கள் கடின உழைப்புக்கு நல்ல பலன் கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவும் கிடைக்கும்.

உங்கள துணையுடன் அன்பும் அனுசரனையுமாக நடந்து கொள்வீர்கள். குடும்பப் பிரச்சினை பற்றி மனம் திறந்து பேசுவீர்கள். அதனால் திருப்தியாக உணர்வீர்கள்.

உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு தேவையான பணம் இன்று காணப்படுகின்றது .



## கடகம்

இன்று ஆன்மீக செயல்களில் ஈடுபடுவீர்கள். பக்திப் பாடல்கள் கேட்டு மன ஆறுதல் பெறுவீர்கள். இதனால் நீங்கள் மகிழ்ச்சியாகவும் அமைதியாகவும் இருப்பீர்கள்.

உங்களின் பணியிடச் சூழல் சுமூகமாக இருக்காது. உங்கள் கடின உழைப்பிற்கும் செயல்திறனுக்கும் அங்கீகாரம் கிடைக்காதது போல் உணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் உங்களின் மாறுபட்ட மன நிலையைக் காண்பிப்பீர்கள். இது உறவின் மகிழ்ச்சியை பாதிக்கும். இன்று பணப்பற்றாக்குறை உங்களுக்கு கவலையை அளிக்கும். இன்று காணப்படும் செலவினங்களை சமாளிப்பதை நீங்கள் கடினமாக உணர்வீர்கள். இன்று பதற்றம் காணப்படும். ஆரோக்கியமாய் இருக்க தியானம் மேற்கொள்வது சிறந்தது.



## சிம்மம்

இன்று விருப்பமான பலன்கள் கிடைப்பது அரிது. உங்கள் மனதை அமைதியாக வைத்துக்கொள்ள வேண்டும். நடந்து செல்லும் போதும் அல்லது பயணத்தின் போதும் காயம் ஏற்படாமல் இருக்க கவனமாக இருக்க வேண்டும்.

உங்களின் பணியிடச் சூழல் சுமூகமாக இருக்காது. உங்கள் கடின உழைப்பிற்கும் செயல்திறனுக்கும் அங்கீகாரம் கிடைக்காதது போல் உணர்வீர்கள்.

உங்கள் துணையுடன் மனம் திறந்து பேச தயங்குவீர்கள். அவரால் புறக்கணிக்கப் படுவதாக திடமாக நம்புவீர்கள்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும். இன்று அடிப்படை தேவைகளை சமாளிப்பதும் நிதிநிலையை சமாளிப்பதும் கடினமாக உணர்வீர்கள்.



## கன்னி

இன்று மகிழ்ச்சியாக இருக்கும் சூழ்நிலை காணப்படும். உங்கள் எண்ணங்களிலும் செயல்களிலும் அது பிரதிபலிக்கும். தியானம் மேற்கொள்வ தன் மூலம் மன ஆறுதல் கிடைக்கும்.

இன்று புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும். ஆது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். உங்கள் பணிகளை திறமையாக செய்வதற்கான சூழ்நிலை காணப்படும்.

உங்கள் துணையிடம் அன்பாக நேர்மையாக பழகுவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

இன்று நிதிவளர்ச்சி சிறப்பாக இருக்கும். நீங்கள் சேமிப்பு திட்டங்களில் கலந்து கொள்வீர்கள். இது உங்கள் நிதிநிலையை மேம்படுத்தும்.



## துலாம்

இன்று உங்கள் முன்னேற்றத்தில் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். உங்கள் பாதையில் நீங்கள் சில தடைகளை சந்திக்க நேரும். மாறும் சூழ்நிலைகளுக்கேற்ப உங்களை மாற்றிக் கொண்டால் சாதகமான பலன்கள் கிடைக்கும். உங்கள் சக பணியாளர்களுடன் தகவல் பரிமாற்ற பிரச்சினைகள் காணப்படும். இது பணியிடச் சூழலை பாதிக்கும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும். அமைதியான அணுகுமுறை மூலம் நல்லுறவை வளர்க்க முடியும். இன்று பணப்புழக்கம் குறைந்து காணப்படும். நீங்கள் நிறைவேற்ற வேண்டிய பொறுப்புகள் அதிகமாக காணப்படும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.



## விருச்சிகம்

இன்று உங்கள் செயல்களை நேர்மையாகவும் நாணயமாகவும் செய்ய வேண்டும். கொள்கைகளில் தளராமல் நடுநிலையோடு இருக்க வேண்டும். இல்லையெனில் உங்களுக்கெதிரான சூழ்நிலை ஏற்படலாம். இன்று அமைதியாக இருப்பது சிறந்தது.

உங்கள் பணிகளை திறமையுடன் கையாளும் உறுதி குறைந்து காணப்படும். சக பணியாளர்களின் ஒத்துழைப்பு கிடைக்காது. உங்கள் செயல்திறனுக்கு மேலதிகாரிகளின் அங்கீகாரம் கிடைக்காது.

உங்கள் துணையிடம் நீங்கள் இன்று வன்மையாக நடந்து கொள்ள நேரலாம். மகிழ்ச்சியாக இருக்க இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நல்லது. பண வரவு காணப்படாது. நிதி வளங்கள் வற்றிக் காணப்படும். பராமரிப்பது கடினமாக இருக்கும்.

# இன்றைய ராசி பலன்கள் - 05.01.2024




இன்று விருப்பமான பலன்கள் கிடைக்காது. ஆன்மீக நோக்கத்திற்கான பயணம் ஒன்றை மேற்கொள்ள நேரும். சில கடினமான சூழ்நிலைகளை சந்திக்க நேரும்.

இன்று பணிகள் அதிகமாக காணப் படும். பணியிடத்தில் நீங்கள் கூடுதல் பொறுப்புகளை ஏற்க நேரலாம்.

குடும்பப் பிரச்சினை காரணமாக உங்கள் துணை யுடன் கருத்து வேறுபாடு காணப்படும். அதனை நீக்கி பரஸ்பரம் ஒருவரையொருவர் புரிந்துகொள்ள வேண்டும்.

பயணத்தின்போது பண இழப்புகள் நேரலாம். பணத்தை கவனமாகப் பாதுகாக்க வேண்டும்.

உங்கள் துணையின் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. அவரின் உடல் நலத்திற்காக செலவு செய்ய நேரும்.




இன்று உற்சாகமான நாளாக இருக் கும். உங்களிடம் ஆர்வம், விருப்பம் வெற்றி பெற வேண்டும் என்ற வேட்கை காணப்படும். இன்று உங்கள் நீண்ட நாள் ஆசையை நிறைவேற்றிக் கொள்வீர்கள்.

பணியிடத்தில் வளர்ச்சி காணப்படுகின்றது. புதிய வாய்ப்புகள் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

உங்கள துணையுடன் பக்குவமான புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்வீர்கள். குடும்ப வளர்ச்சி குறித்து உங்கள் துணையுடன் கலந்தாலோசிபீர்கள்.

இன்று பண வரவு சிறப்பாக இருக்கும். இதனை நீங்கள் பயனுள்ள நோக்கங்களுக்கு பயன்படுத்திக் கொள்வீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். உங்கள் ஆரோக்கியம் திடமாகவும் ஸ்திரமாகவும் இருக்கும்.




இன்று அமைதி காணப்படும். இன்றைய நாளின் விளைவுகள் உங்களுக்கு திருப்தியை அளிக்கும். உங்களிடம் மன நிறைவு காணப்படும்.

நீங்கள் தன்னம்பிக்கையுடன் சிறப்பாக பணியாற்றுவீர்கள். உங்கள் பணி செய்யும் முறை உங்கள் மேலதிகாரிகளால் பாராட்டப்படும்.

உங்கள் துணையுடன் அன்பாகவும் அனு சரணையாகவும் நடந்து கொள்வீர்கள். பரஸ்பர புரிந்துணர்வும் மகிழ்ச்சியும் காணப்படும்.

பயனுள்ள சேமிப்பு பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வீர்கள். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

இன்று உங்களிடம் காணப்படும் மன மகிழ்ச்சி காரணமாக இன்று உங்களின் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




உங்கள் அணுகுமுறையில் யதார்த்தமும் ஒழுங்குமுறையும் தேவை. பயணம் காணப்படுகின்றது. இசை விழாக்களில் பங்கு கொள்வதன் மூலம் உங்களுக்கு ஆறுதல் கிடைக்கும்.

உங்கள் பணிகளைக் கையாளும் போது மிகவும் கவனம் தேவை. உங்கள் பணிகளை திட்டமிட்டு செய்ய வேண்டும். அதன் மூலம் உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை திறம்பட ஆற்ற முடியும்.

உங்கள துணையுடன் பேசும் போது கவனமாக இருக்க வேண்டும். கவனமற்ற வார்த்தைகள் காரணமாக பாதிப்புகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். பேசுவதற்கு முன் விளைவுகளை யோசித்து பேச வேண்டும்.

இன்று நிதிநிலைமை மகிழ்சிகரமாக காணப்படாது. இழப்புகள் ஏற்படாமல் இருக்க பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

